
# LAABH SAMACHAR

Volume: 10 | Issue : 11 | FEBRUARY 2022 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



Republic Day Celebration

To




Central Budget 2022-23 Review Meet



Interview with Industrialist



SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

## மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO ®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX ®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems





## பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available

37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

L.N.R. தாமோதரன் - 98431 71477

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |



# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெஃகோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

மத்திய அரசின் 2022-23க்கான பட்ஜெட்-ல், சிறு தொழில் நிறுவனங்கள் & ஸ்டார்ட்-அப்-களுக்கு பயன் அளிக்கக்கூடிய அறிவிப்புகள் மகிழ்ச்சி அளிக்கிறது. டிஜிட்டல் வளர்ச்சிக்கான அறிவிப்புகளும் அதிகம் வெளிவந்துள்ளதைக் காண முடிகிறது. சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளைக் கடந்து, இந்தியா 75 லிருந்து இந்தியா 100, அதாவது, அடுத்த 25 ஆண்டுகளுக்கு, நமது பாரத தேசம் அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற ஒரு நாடாக அமையும் வகையில் இந்த மத்திய பட்ஜெட் உள்ளது.

கடந்த மாதம் மதுரையில், ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து நடத்திய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. **A.G.S. ராம்பாபு** அவர்களின் புகழஞ்சலி கூட்டத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ம் கலந்து கொண்டு முக்கிய பொறுப்பு வகித்தது. சமூக முக்கிய பிரமுகர்கள் மட்டுமல்லாது, மதுரையின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இதில், மறைந்த **A.G.S. ராம்பாபு** அவர்களுக்கு மதுரையின் முக்கிய பகுதியில், அவரது திருஉருவச் சிலை அமைப்பது, மணிமண்டபம் கட்டுவது, பாலத்திற்குப் பெயர், நினைவுத் தூண் அமைப்பது ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை மனுவை மதுரை பாராளுமன்ற உறுப்பினர் திரு. **சு. வெங்கடேசன்** அவர்களிடம் அளிக்கப்பட்டது.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காம்ர்ஸ்-ன் முக்கிய நிகழ்வான சிட்கான் மாநாடு கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதை அறிவீர்கள். இந்த ஆண்டு மீண்டும் கொரோனா தாக்கம் இல்லாமல் நடத்துவதற்கான சூழல் உருவாகும் என்று கருதுகிறோம். நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து

**பொருள்:** (அதனால்) மனநலத்தால் வரக்கூடிய மறுமையை மட்டும் கருதினாலும் அதற்குங்கூடச் சகவாசத்தின் இனநலம் துணையாக உதவக்கூடிய ஒரு காவலாகும்.

அதிகாரம் 46 | சிற்றினம் சேராமை | அரசியல்
(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**19.01.2022** – **ஏ.ஜி.எஸ். ராம்பாபு** அவர்களின் இல்லத்திற்கு சேம்பர் நிர்வாகிகள் நேரில் சென்று குடும்ப உறுப்பினர்களை சந்தித்து அவரது மறைவிற்கு வருத்தம் தெரிவித்ததுடன், அவரது திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

**26.01.2022** – **73வது குடியரசு தின விழா** சேம்பர்–ல் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. **K.V. பாலா** அவர்கள் கலந்து கொண்டார். சரியாக காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியை சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் ஏற்றினார். கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக சேம்பர் நிர்வாகக்குழுவினர் மட்டுமே பங்கேற்றனர்.

அன்றைய தினம், காலை 11 மணி அளவில், சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. **G.R. ஸ்ரீதரன்** அவர்களின் **பீமரத சாந்தி விழா**விற்கு நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்றைய தினம், மாலை 5.30 மணிக்கு, அனைத்து ஸௌராஷ்ட்ர அமைப்புகள் இணைந்து அமரர் **A.G.S. ராம்பாபு** அவர்களுக்கு **புகழஞ்சலி** நடத்தப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.

**05.02.2022** – சேம்பர் முன்னாள் தலைவர் திரு. **S.K.R. ரமேஷ்** அவர்களின் **இல்ல திருமண வரவேற்பு விழா**விற்கு சேம்பர் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

அன்றைய தினம் – சேம்பர் போஷக அங்கத்தினர், சௌபாக்யா டைமண்ட்ஸ் திரு. **T.L. சபரிபாபு** அவர்கள் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு **வைரவேல் காணிக்கை** அளிக்கும் **வைபவத்திற்கு** சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**08.02.2022** – **மத்திய அரசின் பட்ஜெட் 2022–23** குறித்த விளக்கக் கூட்டம் மாலை 6.30 மணி அளவில் சேம்பர்–ல் நடைபெற்றது. **CA.** திரு. **S.T. வெங்கடேஷ்** M/s. M.R. Sankaran & Co., Chartered Accountants, Madurai அவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

– K.K. தினேஷ்

---

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

தொடர்ச்சியாக இதழை படித்துவரும் அங்கத்தினர்கள், வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இதழின் கடைசிப் பக்கத்தில் கேட்கப்படும் கேள்வி பதில் பகுதியின் மூலம் அங்கத்தினர்களின் வாசிக்கும் ஆர்வம் அறிய முடிகிறது. இதனை கருத்தில் கொண்டு மற்றுமொரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

இந்த மாத இதழ் முதல், புதிய பகுதியை துவக்கியுள்ளோம். அதாவது, அங்கத்தினர்கள் தங்களுக்குள் உள்ள அனுபவங்களை, நிகழ்வுகளை இதழின் வாயிலான அங்கத்தினர்களுக்கு பகிரும் ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இது உங்கள் பக்கம் என்ற தலைப்பில் உங்களுக்காகவே துவக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஆதரவு தர வேண்டுகிறோம். உங்கள் எண்ணங்களை பிரதிபலிக்க இந்தப் பகுதியில் பதிவு செய்யலாம்.

அதுமட்டுமல்லாது, அங்கத்தினர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் நடைபெறும் எந்த ஒரு (குடும்ப நிகழ்ச்சி அல்லாது) சமூக நிகழ்ச்சிகளை எங்களது லாப் ஸமாச்சார் இதழுக்கு விபரங்களுடன் அனுப்பினால், சமூக ஸமாச்சார் பகுதியில் வெளியிடுவோம். ஆதரவளிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

- B.S. ஜெனார்த்தனன்




https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk






**ஸௌராஷ்ட்ர ஸமூக நலப் பேரவை, ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** மற்றும் **ஸௌராஷ்ட்ர ஸமூக ஸ்தாபனங்கள்**

இணைந்து நடத்திய,
11-01-2022 அன்று மறைந்த மதுரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

அமரர் **AGS ராம்பாபு** அவர்களின்

**மலரஞ்சலி, புகழஞ்சலி** கூட்டம்

மதுரை, காமராஜர் சாலை, சேம்பர் ஆப் காமர்ஸ் ஹாலில்
26-01-2022 அன்று மாலை 5.30மணி அளவில் நடைபெற்றது

## கலந்து கொண்டவர்கள்

**Dr. S.S.சரவணன்** மதுரை தெற்கு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

ஸ்ரீ **N.K.ராகவன்**
Ex.தலைவர், ஸௌராஷ்ட்ர ஸமூக நலப்பேரவை

ஸ்ரீ **K.R.யோகேஷ்வரன்**
தலைவர், ஸௌராஷ்ட்ர ஸமூக நலப்பேரவை

ஸ்ரீ **K.B.ராதாகிருஷ்ணன்**
செயலர், K.L.N பாலிடெக்னிக் கல்லூரி

ஸ்ரீ **குமரன் B.ஜகுவா**
தலைவர், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

ஸ்ரீ **K.K.தினேஷ்**
செயலர், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

ஸ்ரீ **K.V.பாலா**
சேர்மன், B.V.K. குரூப் ஆப் கம்பெனீஸ்

ஸ்ரீ **C.K.சேகர்**
Past President, Plastic Manufacturers Association

ஸ்ரீ **E.R.குமரேஷன்**
தலைவர், ஸ்ரீமந் நாயகி மந்திர்

ஸ்ரீ **K.K.G.பிரபாகரன்**
Past President, MADITSSIA

ஸ்ரீ **S.K.R.ரமேஷ்** கௌரவ ஆலோசகர், ஸௌராஷ்ட்ர ஸமூக நலப்பேரவை

ஸ்ரீ **T.R.மோஹன்ராம்**
Past President, The Madurai Printers Association

ஸ்ரீ **K.K.குபேந்திரன்**
Past President, JCI Madurai Central

ஸ்ரீ **J.S.சாய்ஜீவன்**
Madurai Textiles Association

ஸ்ரீ **V.G.ராம்தாஸ்**
தலைவர், ஸௌராஷ்ட்ர கல்லூரி, மதுரை

ஸ்ரீ **E.S.ரமேஷ்**
தலைவர், உணவு தயாரிப்பாளர்கள் சங்கம்

ஸ்ரீ **M.R.சுரேந்திரன்** இணைச்செயலர், ஸௌராஷ்ட்ர ஸமூக நலப்பேரவை

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் செயற்குழு உறுப்பினர்கள் :

**B.S.ஜெனார்த்தனன், N.S.பிரேம்குமார், T.K.சிவநாத், G.R.சுப்பிரமணியன், T.R.சரவணன், A.B.குமரேஷ்**

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சிறப்பு அழைப்பாளர்கள் :

**K.R.ரவீந்திரன், K.R.ஸ்ரீதர், N.R.R.கோபி, S.S.ராம்சுந்தர், P.J.பன்சிதர், V.R.சேகர், T.S.சதீஷ் Er.M.M.தனசேகரன், V.V.சுரேஷ், J.சுரேஷ், T.K.சரவணக்குமார்,**
இவர்களுடன் சேம்பரின் பல உறுப்பினர்களும்

ஸௌராஷ்ட்ர ஸமூக ஸ்தாபன முக்கிய பிரமுகர்கள்

**A.R.ஜெகந்நாதன், D.S.ஜீயர் பாபு, K.R.கிருஷ்ணசாமி**(மொதிபாபு) **T.R.L.ஹரி, J.R.ஜவஹர்லால், M.K.R.ராம்குமார், N.S.R.சாந்தாராம், T.R.பிரகாஷ்குமார், J.R.ஜீவன்பாபு, S.K.B.சந்திரபிரகாஷ், M.K.ரமேஷ்நாத், R.K.பாலயோகி, L.R.உமாபதி, R.B.R.ரகுநாத், நடேசன் R.M.ராம்குமார், O.B.கிருஷ்ணகுமார்**
நிலையூர் ஆதினம் **சுப்பிரமணிய**ஸ்வாமிகள், **வெங்கடேஷ், G.P.சிவகுமார்**
மற்றும்



ஸ்ரீ **சு.வெங்கடேசன்** M.P., Madurai

ஸ்ரீ **M.பூமிநாதன்**
மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

ஸ்ரீ **R.B. உதயகுமார்**
முன்னாள் வருவாய்த்துறை அமைச்சர்

ஸ்ரீ **R. கோபாலகிருஷ்ணன்**
Ex. M.P., Madurai

ஸ்ரீமதி **A.R.மஹாலட்சுமி** BJP

ஸ்ரீ பேரா. இரா **ஸ்ரீனிவாசன்** BJP

ஸ்ரீ **சசிராமன்** BJP

ஸ்ரீ **KSK ராஜேந்திரன்** TMC

ஸ்ரீ **RCS சரவணன்** TMC

இவர்களுடன் பல்வேறு கட்சியைச் சார்ந்த நிர்வாகிகளும்

ஸ்ரீ **N.ஜெகதீஷன்** தலைவர், TNCCI

ஸ்ரீ **P.ரத்தினவேல்** முதுநிலைத்தலைவர், TNCCI

ஸ்ரீ **M.S.சம்பத்** தலைவர், மடீட்சியா

ஸ்ரீ **செல்வராஜ்** தலைவர், டான்சியா

ஸ்ரீ **குமரகுரு** MAVMM கல்வி நிறுவனம்
போன்ற பல அமைப்பு நிர்வாகிகளும்

A.G.S.ராம்பாபு அவர்களின் புதல்வன் சஞ்சய், சகோதரர் கோபி, சகோதரி பல குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் பல சமூக பிரமுகர்கள் கலந்து கொண்டு அன்னாருக்கு மலரஞ்சலியும் புகழஞ்சலியும் செலுத்தினர்.



19.01.2022 அன்று
நமது சேம்பர்
நிர்வாகிகள் அனைவரும் இணைந்து
அமரர். **A.G.S. ராம்பாபு** அவர்களின்
வீட்டிற்கு நேரில் சென்று
குடும்ப உறுப்பினர்களை சந்தித்து
வருத்தத்தை தெரிவித்து ஆறுதல் கூறினர்.
அன்னாரின் திரு உருவப்படத்திற்கு
மலர் தூவி மரியாதை
செலுத்தப்பட்டது.

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

PANDIAN
PERFORMANCE CHEMICALS

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# சேம்பர் நிகழ்ச்சிகள்




நமது பாரத தேசத்தின் 73வது குடியரசு தின விழா நிகழ்ச்சியை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலக வளாகத்தில் கடந்த 26.01.2022 அன்று காலை சரியாக 8.30 மணி அளவில் கொண்டாடப்பட்டது.

கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடு விதிகளை கருத்தில் கொண்டு குறைந்த எண்ணிக்கையில் நடத்துவதற்காக சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் மட்டுமே பங்கு பெறும் வகையில் நடைபெற்றது.

சரியாக காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றினார். நாட்டுப்பண் பாடப்பட்டது. குடியரசு நாளை நினைவு கூறும் வகையில் சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. **K.V. பாலா** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். நாட்டின் விடுதலைப்போராட்ட வீரர்களையும், சட்டம் இயற்றப்பட்டதைக் குறித்தும் பேசினார்.

சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றியுரை வழங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

நினைவூட்டல்...

**தண்ணீர் / மின்சாரம் - சிக்கனம் அவசியம்**

**வாகன ஓட்டிகள் - சீட் பெல்ட் / ஹெல்மெட் அவசியம்**

## இரங்கல்



திரு. J.A. ஐங்கரன்
மறைவு: 06.02.2022

சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், Ekay & அஸோசியேட்ஸ் உரிமையாளருமான திரு. **J.A. ஐங்கரன்** அவர்கள் கடந்த 06.02.2022 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு அழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.




கடந்த பிப்ரவரி 01, 2022 அன்று மத்திய அரசின் பட்ஜெட் 2022-23, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களால் தாக்கல் பாராளுமன்றத்தில் செய்யப்பட்டது.

அதன் விபரங்களை விரிவாக நமது சேம்பர் அங்கத்தினர்கள் அறிந்துகொள்ள வேண்டி, **பட்ஜெட் 2022-23** சிறப்புக் கூட்டம் கடந்த 08.02.2022 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இது குறித்து விளக்கமளிக்க திரு. **CA. S.T. வெங்கடேஷ்,** M/s. M.R. Sankaran & Co., Chartered Accountants, Madurai. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

மிகவும் அருமையாக, அனைவருக்கும் சரியான தகவல்கள் புரியும்படி கொண்டு சேர்க்கும் வகையில் அவர் பேசியது அனைவருக்கும் நிறைவைத் தந்தது. கூட்டத்தில் பங்கேற்ற பலரின் கேள்விகளுக்கு மிகத் தெளிவாக பதிலளித்தார். அவருக்கு நமது சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது. (மத்திய பட்ஜெட் சிறப்பம்சங்களுடன், இவர் கூறிய விபரங்களை பக்கம் 14 & 15ல் காணலாம்).

இந்தக் கூட்டத்திற்கு, சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் நன்றியுரை வழங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

இந்தக் கூட்டத்திற்கு இரவு விருந்தோம்பல் ஸ்பான்சர் செய்த சேம்பர் செயற்குழு உறுப்பினரும், அலுவலக நிர்வாக சேர்மனுமான திரு. **T.K. சிவநாத் பாபு** அவர்களை நமது சேம்பர் கௌரவித்தது. அதோடு, சிறப்பாக பணியாற்றி வரும் இதழ் குழு சேர்மன் திரு. **B.S. ஜனார்த்தனன்**, வாழ்த்துக்குழு சேர்மன் திரு. **V.V. ராம்லஷ்மண்ஜீ** மற்றும் நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** ஆகியோரையும் நமது சேம்பர் கௌரவித்தது.




Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.

# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE



Rct



Orthodontics



Dental Implants




Dentures



Dental Surgery



Cosmetic Dentistry



Oral Hygiene



Periodontology

தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# சமூக நிகழ்வுகள்



## கிளைத் திறப்பு விழா

பாரத ஸ்டேட் வங்கியின்
தெற்குவாசல் புதிய கிளை திறப்பு விழா,
18.01.22 அன்று கீழ வெளி வீதியில் நடைபெற்றது.
சேம்பர் வெளியுறவுச் செயலாளர்
திரு. V.G. ராம்தாஸ் அவர்கள்
திறந்து வைத்தார்.

தங்கள் பகுதியில் நடக்கும்
சமூக சுப நிகழ்வுகளை
எங்களது சேம்பர்
வாட்ஸ்ஆப் எண்ணிற்கு
விபரங்களுடன் அனுப்பினால்
நமது லாப் ஸமாச்சார் இதழின்
சமூக ஸமாச்சார் பகுதியில்
வெளியிடப்படும்.
**93441 97952**

## ஆன்மிக நிகழ்ச்சி



சௌபாக்யாஸ் டைமண்ட்ஸ் பங்குதாரரும்,
நமது சேம்பர்-ன் போஷக உறுப்பினரும்,
லாப் ஸமாச்சார் இதழுக்கு தொடர்
விளம்பரதாரருமான
திரு. T.L. சபரிபாபு அவர்கள்,
திருப்பரங்குன்றம்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்கு
08.02.22 அன்று வைரவேல் காணிக்கையாக வழங்கினர்.




## வாழ்த்துக்கள்

சென்னை, வேலம்மாள் வித்யாலயா பள்ளியில்
நீட் பயிற்சி பெற்ற மாணவச்செல்வன் ஹயகிரிவாஸ்
நீட் தேர்வில் மாநிலத்தில் இரண்டாவது மாணவனாக
705/720 மதிப்பெண்கள் பெற்று, நம் சமூகத்திற்கு
பெருமை சேர்த்துள்ளார்.
அகில இந்திய அளவில் 56வது இடமும், ஓபிசி பிரிவில்
13வது இடமும் பெற்றுள்ளார். தற்பொழுது டெல்லி எய்ம்ஸ்-ல்
மருத்துவ சீட்டும் கிடைத்துள்ளது.
இவரது பெற்றோர்கள் பாரத் குமார் - பிரதீபா ஆவர்.

**Sowndarya Traders**
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733
Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

VEDHAVALLI HOLIDAYS

அஸ்கிதெங்க நமஸ்கார்...



# அமி
# வேதவல்லி ஹாலிடேஸ்

International & Domestic Flight Ticket Booking கெரி தே3ரியோ...

துர காம்த4ாம் கெரத்தோ,
அவ்ர தேசு கா3ம் (உள்நாடு) /
விதே3சு கா3ம் (வெளிநாடு) ஜாரியோயா?


R.B. SARAVANAN

துங்கோ, அவ்ர தேசு கா3ம் (உள்நாடு) /
விதே3சு கா3ம் (வெளிநாடு)
சுட்டு (டூர்) ஃபி2ர்னோ மெனி லக3ரஸ்யா?

பு4லோக் பூரா சுட்டு ஃபி2ரி தெ3க்கடத்தோ...
அங்கோ3 பெ3ாவோ... அமி சே துர செங்கோ3...

வீஸ் (20) ஒஸு அனுபவம் அங்கோ3 சே...

அஸ்கி கா3மும் துங்கோ
பொ4த்துரங்கன் பொ3ல்லி ஜாத்தோ
பொ4த்துரங்க3ன் Travel கெரத்தோ
அங்கோ3 call கெருவோ

**99430 31237**

AIR INDIA express | Emirates | IndiGo | spicejet | SINGAPORE AIRLINES

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

VEDHAVALLI HOLIDAYS

## VEDHAVALLI HOLIDAYS

114, 15, Kondithalu Street, Kamarajar Salai,
Opp.to Tamilnadu Chamber of Commerce,Madurai- 625 009






# ராசிபுரத்தில் ஒரு ராசியான தொழிலதிபர்

நம் சமூகத்தில் யாரும் இல்லாத துறையில் களமிறங்கி சாதித்து வரும் **ஃபைபர்டஃப் பிராடக்ட்ஸ் இந்தியா பி.லிட்.,** நிறுவன உரிமையாளர் **திரு. நந்தகுமார்** அவர்களை நமது சேம்பர் லாப் ஸமாச்சார் இதழ் குழு நேர்காணல் செய்தது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ராசிபுரத்தில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. நமது சேம்பர் இதழ் குழுவினர்கள் முதலில் இந்நிறுவனத்தின் இயக்குனர் திரு. **எஸ்.எஸ். பாலாஜி** அவர்களை சந்தித்து பேட்டி கண்டது.

1987ம் ஆண்டு **ஃபைபர்டஃப் பிராடக்ட்ஸ் இந்தியா பி.லிட்.**, என்ற பெயரில் இந்நிறுவனம் துவங்கப்பட்டது. இந்த நிறுவனம் ஃபைபர் சார்ந்த பொருட்கள் மற்றும் உதிரிபாக பொருட்களை தயாரித்து வருகிறது. சிறிய அளவில் துவக்கப்பட்ட இந்நிறுவனம், பின்பு, அரசு போக்குவரத்துகங்களுக்கு தங்களின் உதிரி பாக தயாரிப்புப் பொருட்களை சப்ளை செய்து வந்தது. பின்பு, கேட்டர் பில்லர், சிஎம்டபிள்யு, பிர்லா போன்ற பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்களின் தயாரிப்புப் பொருட்களை இன்றுவரையில் சப்ளை செய்து வருவதாக தெரிவித்தார். இதில், கேட்டர்பில்லர் நிறுவனத்திற்கு ஃபைபர் கிளாஸ் தயாரிப்புகளை சப்ளை செய்வது தாங்கள் மட்டுமே தவிர மற்ற நிறுவனங்களிடம் இருந்து பெருவதில்லை என்று கூறியது ஆச்சரியத்தை அளித்தது.

உள்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமல்லாது, எகிப்து, ஸ்வீடன் போன்ற வெளிநாடுகளுக்கும் தங்களது தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. குறிப்பாக ஸ்வீடன் நாட்டில் அதிக அளவில் தங்களது தயாரிப்பு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாக தெரிவித்தார். அங்குள்ள சன்மார் குழுமம் மற்றும் மருத்துவமனைகள் பயன்பாட்டிற்கு தங்கள் ஃபைபர் தயாரிப்புப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். ஃபைபர் மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு முக்கிய உதிரிபாகத்திற்கு இந்நிறுவனம் காப்புரிமையைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரெசின் மூலம் தயாரிக்கப்படும் இந்த ஃபைபர் கிளாஸ் தயாரிப்பினை, தமது நிறுவனம் தயாரிப்பதோடு மட்டுமின்றி தாங்களே விற்பனையும் செய்து வருவதாக தெரிவித்தார். குறிப்பாக, திருச்சி, கோவை, சேலம், ராசிபுரம், பாண்டிச்சேரி போன்ற பகுதிகளில் விற்பனை நிலையம் அமைத்து ஃபைபர் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருவதாகவும் கூறினார்.



தங்களின் பொருட்கள் மற்றும் தயாரிப்பு முறைகள் குறித்து மிக அருமையாகவும், நுட்பமாகவும் விவரித்தார். தங்கள் தொழிற்சாலையில் பெரும்பாலும் எந்திரத்தைவிட

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear
ANAND
Viking
Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE
JOCKEY INNER WEAR
Poomex
MANGAI NIGHTIES
RASATHE DARLING NIGHTIES
YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
B THE BABY SHOP
தி அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402





மனித உழைப்பே அதிகம் எனவும், தங்கள் நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் இத்துறையில் அனுபவமிக்கவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும் கூறினார். தமது நிறுவனத்தின் மூலம் 12% முதல் 15% வரை உற்பத்திக் கழிவ ஏற்படும் என்றும், அக்கழிவுகள் மறுசுழற்சிக்கு உகந்ததல்ல எனவும், அதனை முறையாக அரசின் வழிகாட்டுதல் படி இந்நிறுவனம் கையாள்கிறது என்று கூறினார்.

எந்திரங்களை விட பெரும்பான்மையாக, மனித உழைப்பைச் சார்ந்த இந்த நிறுவனம், தங்களின் ஊழியர்களுக்கு, தொழில் ரீதியாக முறையான பாதுகாப்பு அளித்து வருவதாகவும் தெரிவித்தார். ஊழியர்களை சிறந்த முறையில் நலம்பேணுவதே தங்களின் முக்கிய கடமையாகக் கருதுகின்றனர் இந்நிறுவனத்தார். அதன் பிரதி பலனாக அவ்வூழியர்களும் கடமை உணர்வுடன் செயல்படுவதை நேரில் காண முடிந்தது.

திரு. **பாலாஜி** அவர்களைத் தொடர்ந்து, திரு. **நந்தகுமார்** அவர்கள் நமக்களித்த பேட்டியில், பள்ளிக்காலம் முதலே தாம் சமுதாயத்தில் தனித்த அடையாளத்துடன் திகழ வேண்டும் என்ற எண்ணம் தன்னிடத்தில் மேலோங்கி இருந்ததாக தெரிவித்தார். முன்னோடிகள் என்றுமே தனக்கான தனித் திறனுடன் இருப்பதால் தான் அவர்கள் அனைவருக்கும் முன்னோடியாக இருக்கின்றனர். இந்த எண்ணமே நாளடைவில், தொழில் புரிய வேண்டும் என்கிற உந்துதலை தமக்கு அளித்ததாக உணர்ச்சிப்பூர்வமாகத் தெரிவித்தார். அதற்காக தமக்கு கிடைத்த அரசுப்பணி வேலையையும் துறந்ததாகக் கூறினார்.

ஓரிடத்தில் அமர்ந்து ஒரே வேலையை செய்வதில் தமக்கு திருப்தியில்லை, ஆகவே, தமக்கான தனித்துவத்தை, அடையாளத்தைப் பெற தொழில் செய்ய வேண்டும் அதற்கான வாய்ப்பைத் தேடி ஓட வேண்டும் என்ற நோக்கில் களமிறங்கியதாக பெருமையுடன் கூறினார். திரு. **நந்தகுமார்** அவர்களின் விருப்பத்திற்கு முழு ஆதரவையும் அவர்களது பெற்றோர்கள் அளித்தனர்.

ஒரே நோக்கம், தொழில் துவங்க வேண்டும்... அதற்கு கையில் பணம் இல்லை, எத்தொழிலை செய்ய வேண்டும் என்கிற நோக்கமும் இல்லை. அதற்காக அவர் செய்தது, தற்போதுள்ள நிலையில் முதலீடே இல்லாமல் அல்லது மிகவும் குறைந்த முதலீட்டில் தொழில் செய்ய வேண்டும். கடன் பெறவும் கூடாது. இதன் அடிப்படையில் எந்தத் தொழிலை செய்யலாம் என்கிற நோக்கில் அவரது தேடல் கடிவாளம் போடப்பட்ட குதிரை போல இருந்ததன் பயனாக, கிடைத்ததே இந்தத் தொழில் வாய்ப்பு. இந்தத் தொழிலுக்கு மின்சாரம், எந்திரம் எதுவும் தேவைப்படவில்லை. தாம் மன உறுதியுடன் தேடிய தேடலுக்கு இறைவனால் கிடைத்த வாய்ப்பு தான் இத்தொழில் என்று மிகவும் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இளைஞர்கள் தொழிலில் ஈடுபட வேண்டும் என்ற தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அதற்காக அவர் கூறிய அறிவுரையானது. தொழில் செய்ய விரும்பும் இளைஞர்கள், கிடைக்கும் வாய்ப்பை வைத்து எவ்வாறு முன்னேறுவது என்கிற அடிப்படையில் முழு கவனத்துடன் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்கிற தமது வாழ்வியல் அனுபவத்தை இளைஞர்களுக்காக தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது, நம்மை நல்ல முறையில் பெற்று வளர்த்த இந்த சமூகத்திற்கு, முழுமையாகவும், நேரடியாகவும் சேவைகளைச் செய்ய முடியாவிட்டாலும், சிறப்பாக சேவை செய்து வரும் அமைப்புகளில் தாம் ஒரு உறுப்பினராக இணைந்து தம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்கிற நோக்கில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் ஆயுட்கால உறுப்பினராக கடந்த பத்தாண்டுகளுக்கு முன் இணைந்ததாகத் தெரிவித்தார்.

அதோடு, சேம்பர் நடத்தும் மாபெரும் நிகழ்ச்சிகளில் ஒன்றான சிட்கான் மாநாட்டில், ஸ்டால் அமைப்பதால் தமது நிறுவனத்திற்கு லாபம் கிடைப்பது இல்லை என்றாலும், சமூகத்தில் நடைபெறும் ஒரு மாபெரும் முக்கிய நிகழ்விற்கு தமது பங்களிப்பும் ஆதரவும் அவசியம் இருக்க வேண்டும் என்று கருதியே தாம் கலந்து கொள்வதாகத் தெரிவித்தார்.

இறுதியாக, தமது குடும்ப விபரங்களை பகிர்ந்தார். சுகன்யா தமது வீட்டுப் பெயர் என்றும், தமக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி அமெரிக்காவில் வசிக்கின்றனர் என்று கூற... நேர்காணல் நிறைவு பெற்றது. - இதழ் குழு

# மத்திய பட்ஜெட் – சிறப்பம்சங்கள்
## 2022-23

- 2022-23ம் நிதியாண்டுக்கான மத்திய அரசின் மூலதன செலவுகள் 10.65 லட்சம் கோடியாக அதிகரிக்கும். இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதமாகும்.

### விவசாயம் & ரயில்வே:

- 9.05 லட்சம் ஹெக்டெர்களுக்கு பாசனம், 65 லட்சம் மக்களுக்கு குடிநீர், நீர் மற்றும் சூரிய ஒளி மின்சாரம் வழங்க ரூ. 44,605 கோடியில் கென்பெட்வா இணைப்பு எடுக்கப்படும்.
- இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக மாநில அரசுகள் மற்றும் சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று அறிவிக்கப்படும்.
- நாட்டில் ரசாயனம் அற்ற இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்படும்; வேளாண் நிலங்களை அளக்க, பயிர்ச் சேதங்களை ஆராய ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.
- விவசாயிகளுக்கும், தொழில் துறையினருக்கும் உதவி புரியும் வகையில், ரயில்வே போக்குவரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- 'ஒரு ரயில் நிலையம், ஒரு உற்பத்திப் பொருள்' என்ற போக்குவரத்துத் திட்டமானது குறிப்பிட்ட ஒரு பகுதியிலான உற்பத்திப் பொருளுக்கு ஊக்கமளிக்கும்.
- அடுத்த 3 ஆண்டுகளுக்குள்ளாக 400 வந்தே பாரத் ரயில்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு இயக்கப்படும்.
- கதிசக்தி திட்டத்தின் கீழ் அடுத்த சில ஆண்டுகளில் 100 சரக்கு முனையங்கள் உருவாக்கப்படும்.

### 2022 பட்ஜெட் சில விசேஷ தகவல்கள்

- இந்த ஆண்டு பார்லி.,யில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட், நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு 4வது பட்ஜெட் ஆகும்.
- மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு இது தொடர்ச்சியான 9வது பட்ஜெட்.
- நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இரண்டாவது முறையாக காகிதம் இல்லாத முறையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 1.30 மணி நேரம் உரையாற்றி நிறைவு செய்தார்.
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், பருவநிலை மாற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
- அடுத்த 25 வருடம் இந்தியா எப்படி இயங்கப் போகிறது என்பதற்கு இந்த பட்ஜெட்-ல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வி, மகளிர் மற்றும் பொது நலன்:

- பள்ளிகளில் கல்வி போதித்தலை மேம்படுத்துவதற்காக உயர்தர மின்னனு வழி கல்விமுறை அறிமுகப்படுத்தப்படும்.
- ஊரக மாணவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி கோவிட் பாதிப்பு காரணமாக இரண்டு வருடங்களுக்கு பாதிக்கப்பட்டுள்ளதால் புதிய கல்வி தொலைக்காட்சி சேனல்களை உருவாக்க முடிவு.
- மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 3 திட்டங்கள் அறிமுகம். 1. சகி இயக்கம், 2. வாத்சல்யா இயக்கம் மற்றும் 3. ஊட்டச்சத்து 2.0 இயக்கம் ஆகியவை துவக்கம்.
- மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் தொலைபேசி வழியாக ஆலோசனை வழங்கும் மன ஆரோக்கிய திட்டத்திற்கு அனுமதி.

### உட்கட்டமைப்பு வசதி:

- ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு திட்டத்தின்கீழ் 60,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 3.8 கோடி இல்லங்களுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது.
- பிரதமர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 48,000 கோடி ரூபாய் வரும் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படவுள்ளன.
- இ-சேவை மூலம், வரும் 2025ம் ஆண்டுக்குள் கண்ணாடி ஒளியிழை மூலம் அனைத்து கிராமங்களையும் ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆத்மநிர்பார்பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக உலகத்தரம் வாய்ந்த உள்நாட்டு தொழில்நுட்பமான KAWACH-ன் கீழ் 2000 கி.மீ., தூரம் சாலை 2022-23ல் கொண்டுவரப்படும்.
- நதிகள் இணைப்பு தொடர்பான 5 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் காவிரி-பெண்ணாறு இணைப்புத் திட்டம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலுக்குப் பின் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாரம்பரிய மலைப்பகுதி சாலைகளுக்கான பர்வதமாலா திட்டம், தனியார் பொதுத்துறை கூட்டு முயற்சியின் கீழ் கொண்டுவரப்படும்.
- புதிய திட்டத்தின் கீழ் 2 லட்சம் அங்கன்வாடிகளை மேம்படுத்த திட்டம்.
- 75 மாவட்டங்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளில் கிளைகள் துவக்க திட்டம்.

## திறன் மற்றும் டிஜிட்டல் முன்னெடுப்புகள்:

- டிஜிட்டல் சிப் கொண்ட இ-பாஸ்போர்ட் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும்.
- 1.5 லட்சம் அஞ்சல் நிலையங்கள் மின்னணு முறையில் இணைக்கப்பட்டு, பணப் பரிமாற்றத்திற்கு உதவும் வகையில் மேம்படுத்தப்படும்.
- மின்னணு வாயிலான பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, பள்ளிகளுக்கு இணைப்பு வழங்க திட்டம்.
- வாகனங்களுக்கான மின்கலன்களை மாற்றிக்கொள்ளும் வசதி மேற்கொள்ளப்படும்.
- பொதுப் போக்குவரத்தில் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத தூய்மையான போக்குவரத்துத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- மின்னணு வரைகலை தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவர்களுக்கு அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், டிஜிட்டல் விளையாட்டுகள் மற்றும் கார்டூன் படங்கள் தயாரிப்பு ஆகியவற்றில் திறனை வளர்க்கவும் திட்டங்களை வடிவமைக்க சிறப்பு பணிக்குழு அமைக்கப்படும்.
- சுலபமான வாழ்க்கை & எளிதான வணிகம் புரிதலை ஊக்குவிக்க எங்கு வேண்டுமானாலும் பதிவு செய்யும் வகையிலான 'ஒரே தேசம் ஒரே பதிவு' முறை அமல்படுத்தப்படும்.
- பிளாக் செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மத்திய ரிசர்வு வங்கி மின்னணு கரன்சி (மெய்நிகர் ரூபாய்) டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கொள்கையை ஊக்குவிக்கும் வகையில் மத்திய ரிசர்வு வங்கி மூலம் டிஜிட்டல் கரன்சி இந்த நிதியாண்டில் அறிமுகம் செய்கிறது.
- பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதத்தை குறைக்க 10 நாட்களுக்குள் 75% பில்-ஐ பணமாக்கும் முறை உருவாக்கப்படும். இதற்காக காகிதமற்ற மின்னணு பில்களை அமைச்சகங்கள் ஏற்படுத்தும்.

## தொழில் நலன்:

- புதிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரும் வரிச்சலுகைகள் மார்ச் 2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சிறு தொழில் நிறுவனங்களுக்கு கூடுதலாக ரூ. 2 லட்சம் கோடி கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நடைமுறைக்கு ஒவ்வாத 1,486 சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளது. இது வர்த்தகம் புரிவதை எளிதாக்கும்.

## நேர்முக மற்றும் மறைமுக வரி:

- மொபைல் உள்ளிட்ட மின்னணு பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களுக்கு இறக்குமதி தீர்வையை 7.5 சதவீதமாக குறைக்க முடிவு.
- குடைகள் மீதான வரி 20% உயர்த்தப்படுகிறது. பட்டை தீட்டாத வைரத்தின் மீதான வரி 5 சதவீதமாக குறைப்பு.
- தனிநபர் வருமான வரி விலக்கு உச்சவரம்பில் எந்தமாற்றமும் இன்றி 2.50 லட்சமாக உள்ளது.
- வருமான வரி செலுத்துபவர்கள் வருமான வரிக் கணக்கு தாக்கலில் தவறு இருந்தால் அதனை திருத்தம் செய்யலாம்.
- திருத்தப்பட்ட வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய 2 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்படுகிறது. கூடுதல் வருமானத்தை கணக்கில் காட்டி கூடுதல் வரி செலுத்த விரும்புவோருக்கும் திருத்தப்பட்ட கணக்கு தாக்கல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- புதிய மேம்படுத்தப்பட்ட வருமான வரித்தாக்கல் படிவும் அறிமுகம் செய்யப்படும்.
- மெய்நிகர் சொத்துக்கள் பரிமாற்றத்திற்கு 30 சதவீதம் வரி விதிப்பு.

## மத்திய பட்ஜெட் 2022-23 குறித்து நாளிதழ்களில் வெளியான சேம்பர்-ன் கருத்து


**டிஜிட்டல் வளர்ச்சிக்கு முக்கியத்துவம்**

பட்ஜெட்டில் டிஜிட்டல் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதை வரவேற்கிறோம். ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரி சலுகைகளை 2023 வரை நீட்டிக்கும் அறிவிப்பு இளைய, புதிய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும். சிறு தொழில் நிறுவனங்களுக்கு கூடுதலாக ரூ.2 லட்சம் கோடி கடன் வழங்குவதால் நாட்டின் பொருளாதாரம், உற்பத்தி அதிகரிக்கும். உள்ளீட்டு வரி கள்எடுக்க கால அவகாசம் நீட்டிப்பு அருமை. டி.சி.எஸ்.,க்கான அபராத தொகையை நீக்கியதற்கு நன்றி.

குமரன் பி.ஜாகுவா, தலைவர், சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்கம்

**இளைஞர்களுக்கு நம்பிக்கை**

தினமலர்


டாதது எமாற்றம் அளிக்கிறது.

சௌராஷ்டிரா வர்த்தக சபைத் தலைவர் குமரன் பி.ஜகுவா: டிஜிட்டல்சார்ந்த வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக, மத்திய அரசெடுத்துள்ள டிஜிட்டல் விரிவாக்கப் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் வரவேற்புக்குரியது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகைகள் 2023 மார்ச் வரை நீட்டிப்பது, புதிய தொழில் முனைவோருக்கு உந்துதலாக இருக்கும்.

இந்திய சிறு, குறுந்தொழில்

தினமணி


Sourashtra Chamber of Commerce president Kumaran B. Jaghuva said the huge allocation to startups would be a fillip to neo-entrepreneurs. MSMEs, which were reeling under severe losses due to various factors, especially over the last two years after the pandemic outbreak, should feel relieved as the budget had announced ₹2 lakh crore and other sops for the sector. The announcement on enhancing railway projects, linking of rivers, et al, were set to boost the economy, he added.

தி இந்து (ஆங்கிலம்)

# பட்ஜெட்!... சுவாரஸ்யமான தகவல்கள் இதோ!...

இந்தியாவில் பட்ஜெட் தாக்கல் செய்யும் நடைமுறையானது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1860ம் ஆண்டு ஏப்ரல் 7ம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்காட்டிஷ் பொருளாதார நிபுணரும், அரசியல்வாதியுமான **ஜேம்ஸ் வில்சன்** கிழக்கிந்திய கம்பெனி சார்பில் முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இவ்வாறு பொது பட்ஜெட் குறித்து பல்வேறு அறிய வேண்டிய தகவல்களும், வரலாறும் உள்ளன. அவற்றில் சில...

**சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜெட்:** இந்தியாவில் தாக்கல் செய்யப்பட்ட முதல் பட்ஜெட் என்றால் அது 1860ம் ஆண்டில் என்பது தெரியவந்திருக்கிறது. சரி சுதந்திர இந்தியாவில் தாக்கல் செய்யப்பட்ட முதல் பட்ஜெட் எப்போது என்று பார்க்கலாம். சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜெட், 1947ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி அப்போதைய நிதித்துறை அமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டியாரால் தாக்கல் செய்யப்பட்டது.

**நீண்ட பட்ஜெட் உரை:** நிர்மலா சீதாராமன், கடந்த 2020ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ம் தேதி தாக்கல் செய்த மத்திய பட்ஜெட் உரை 2 மணி நேரம் 42 நிமிடங்கள் நீடித்தது. பட்ஜெட் உரையின் நிறைவில், இன்னும் 2 பக்கங்கள் பாக்கியிருக்கியிருந்த நிலையில், தொடர்ந்து பேச இயலாமல், உரையை சுருக்கமாக நிறைவு செய்தார். விடுபட்ட பக்கங்களை படித்ததாகக் கருத்தில் கொள்ளுமாறு அவைத் தலைவரைக் கேட்டுக்கொண்டார். அதற்கு முன்பு, 2019ம் ஆண்டு ஜூலை மாதம் தான் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட் உரை 2 மணி நேரம் 17 நிமிடங்கள் நீடித்தது. இது முதலில் சாதனையாக இருந்தது. 2020 பட்ஜெட் உரையின் மூலம் நிர்மலா சீதாராமன் தனது சாதனையை தானே முறியடித்தார்.

**மிகக் குறுகிய பட்ஜெட் உரை:** 1977ம் ஆண்டு மத்திய நிதியமைச்சராக இருந்த ஹிருபாய் முல்ஜிபாய் பட்டேல் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட் உரைதான் இதுவரை தாக்கல் செய்யப்பட்ட உரைகளில் மிகக் குறுகிய உரையாகும். இதில் சரியாக 800 வார்த்தைகள்தான் இடம்பெற்றிருந்தன.

**அதிக வார்த்தைகள் கொண்ட பட்ஜெட்:** அதிக வார்த்தைகள் கொண்ட பட்ஜெட் என்றால் அது நரசிம்ம ராவ் தலைமையிலான ஆட்சியின்போது, நிதியமைச்சராக இருந்த மன்மோகன் சிங் தாக்கல் செய்ததுதான். அதில் 18,650 வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. அதற்கு பின்பு, 2018ம் ஆண்டு அருண் ஜெட்லி தாக்கல் செய்த மத்திய பட்ஜெட்டில் 18,604 வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. இதனை அவர் 1 மணி நேரம், 49 நிமிடங்கள் வாசித்தார்.

**அதிக பட்ஜெட்களை தாக்கல் செய்தவர்:** நாட்டின் வரலாற்றில் எண்ணற்ற பட்ஜெட்களை தாக்கல் செய்தவர் என்ற பெருமையை வைத்திருப்பவர் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய். இவர் 1962-69ம் ஆண்டு வரை மத்திய நிதியமைச்சராக இருந்து 10 மத்திய பட்ஜெட்களை தாக்கல் செய்துள்ளார். இதற்கு அடுத்தடுத்த இடங்களில், ப. சிதம்பரம்(9), பிரணாப் முகர்ஜி (8), யஷ்வந்த் சின்ஹா (8), மன்மோகன் சிங் (6) ஆகியோர் உள்ளனர்.

**பட்ஜெட் நேரம்:** 1999ம் ஆண்டு வரை மத்திய பட்ஜெட் என்றால், பிரிட்டிஷ் ஆட்சியினர் பின்பற்றிய முறைப்படி, பிப்ரவரி மாதம் கடைசி நான்று மாலை 5 மணிக்குத் தாக்கல் செய்யப்படும். அதன்பிறகு, முன்னாள் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, 1999ம் ஆண்டு பட்ஜெட் தாக்கல் செய்யும் நேரத்தை முற்பகல் 11 மணி என மாற்றினார். காலணி ஆதிக்க முறையில் பிப்ரவரி கடைசி நாளன்று பட்ஜெட் தாக்கல் செய்வது என்ற முறையையும் மாற்றி 2017ம் ஆண்டு மத்திய நிதியமைச்சராக இருந்த அருண் ஜேட்லி, பிப்ரவரி 1ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்தார்.

**மொழிகள்:** 1955ம் ஆண்டு வரை மத்திய பட்ஜெட் ஆங்கில மொழியில் மட்டுமே அச்சடிக்கப்பட்டு வந்தது. காங்கிரஸ் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு மத்திய பட்ஜெட் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி என இருமொழிகளில் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

நன்றி – தினமணி



Prop.: B.S. Rajan
• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


https://youtu.be/-JMVniVMLr0

சமுதாயம் மற்றும் பொருளாதார ரீதியில் நலவுற்ற பின்தங்கிய குறிப்பாக படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுய தொழில்கள் தொடங்க மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் உதவி பெற தமிழக அரசு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தி வருகிறது.

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

**திட்ட மதிப்பீடு:**

- உற்பத்தித் தொழில் – அதிகபட்சம் ரூ.15 லட்சம் வரை.
- சேவைத் தொழில் – அதிகபட்சம் ரூ.5 லட்சம் வரை.
- வியாபாரம் – அதிகபட்சம் ரூ. 5 லட்சம் வரை.

**வண்ணப்பதாரர் தகுதி:-**

- **கல்வி:** குறைந்தபட்சம் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- **வயது வரம்பு:** பொதுப்பிரிவை சார்ந்த ஆண்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். பெண்கள், பின்தங்கிய வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையர் ஆகிய சிறப்பு வகை பிரிவினர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
- **இருப்பிடம்:** விண்ணப்பதாரர் 3 ஆண்டுகளுக்கு குறையாமல் இம்மாவட்டத்தில் வசிப்பராக இருத்தல் வேண்டும்.
- **குடும்ப மொத்த ஆண்டு வருமானம்:** ஆண்டுக்கு ரூ. 5,00,000/- க்குள் இருத்தல் வேண்டும்.
- **வங்கிக் கடன்:** திட்ட மதிப்பீட்டில் 90 விழுக்காடு முதல் 95 விழுக்காடு வரை.
- **சொந்த முதலீடு:** பொதுப்பிரிவை சார்ந்த ஆண்கள் 10 விழுக்காடும் மற்ற சிறப்பு பிரிவினர்கள் 5 விழுக்காடும் சொந்த முதலீடு செய்ய வேண்டும்.
- **மானியம்:** திட்ட மதிப்பில் 25 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ. 2,50,000/- வரை.
- **விண்ணப்பிக்கும் முறை:** பயனாளிகள் www.msmetamilnadu.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து கீழ்க்கண்ட ஆவணங்களின் இரண்டு நகல்களுடன் சேர்த்து அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
